படுத்திக் கொண்டிருக்கிற நேரத்தில் மாணவர்களை அங்கே, அனுப்புவது என்றால் அது புதுப் பிரச்னைகளை உருவாக்கும். ஆகவே, அத்தகைய செலவை மேற்கொள்ள முடியாது. அத்தகைய நிலைமைக்குப் போக வேண்டியதும் இல்லை. நமக்கு இருக்கின்ற பல துறை அறிவையும் மாணவர்களுக்குச் சொல்லித் தருவது, அவர்களுக்குப் பயன்படும் அளவிற்குச் சொல்லித்தருவது கல்வியின் ஒரு பாகம் என்ற முறையிலே கல்வி இருப்பதால் இதைச் செய்கிறோம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் கேர் நிறுவன உதவியுடன் சுகாதாரக் கல்வித் திட்டம் எல்லாப் பள்ளிகளிலும் நடத்தப்படுகிறதா? இல்லையென்றால் எல்லாப் பள்ளிகளிலும் நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கின்ற 2,600 தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் எல்லா ஆசிரியர்களுக்கும் பயிற்சி தரும் திட்டம் இந்தத் திட்டம். ஆகவே, எல்லாத் தொடக்கப் பள்ளிகளுக்கும் வரும்.

தொடக்கப்பள்ளிகளில் கூடுதல் ஆசிரியர்கள் நியமித்தல்.

*வினா எண். 437—திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக தொடக்கப்பள்ளிகளில் பத்து ஆசிரியர்கள் பணியாற்றும் பள்ளிகளில் கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமித்திட 10+1 என்று ஆணையிட அரசுக்கு எண்ணம் உண்டா?

(ஆ) ஆம், எனில் எந்த ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) ஆண்டுதோறும் ஓரளவுக்கே புதியதாக கூடுதல் ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்திட நிதி நிலை இடம் தருகிறது. எனவே, அவ்வாறு ஏற்படுத்தும் புதிய கூடுதல் பதவிகளை பகிர்ந்தளிக்கையில் 10+1 அடிப்படையில் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவைப்படும் ஆசிரியர் பதவித் தேவை கணக்கில் எடுக்கப்படுவது இல்லை. தற்போதைக்கு இந்நிலையில் மாற்றம் செய்ய இயலாது. (ஆயினும், 10-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் ஏற்கெனவே பணியாற்றி வரும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் தொடர்ந்து பணியாற்றி வரலாம் என்று கணக்கிடும் பொழுது 10+1 அடிப்படையில் தேவைப்படும் பதவியும் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படுகிறது.

1981 மார்ச் 23]

திரு. இரா. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவ விடுப்பு 18 மாதங்களுக்கு என்று இருக்கிற காரணத்தால், அவர்கள் தொடர்ந்து, நினைத்தபோதெல்லாம் அந்த விடுப்பைப் பயன்படுத்துகிற காரணத்தால், மாணவர்களுக்குப் பாடம் நடத்த இடைஞ்சலாகவும், தடையாகவும் இருக்கின்றது. அந்தக் காரணத்தால், 10 பிளஸ் 1 என்ற விகிதத்தில் ஆசிரியர்களை நியமனம் செய்வார்களானால் விடுப்பில் சென்றிருக்கிற ஆசிரியர்களுக்குப் பதிலாக, அந்த ஆசிரியர்களைப் பாடம் சொல்லிக் கொடுக்கச் செய்து, மாணவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் அந்தப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே அரசு 10 பிளஸ் 1 என்ற வீதத்தில் ஆசிரியர்களை நியமனம் செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நாம் முடிந்த அளவிற்கு, நமக்கு இருக்கிற நிதி ஆதாரங்களைக் கணக்கில் வைத்து, கடந்த 2, 3 ஆண்டுகளாகப் புதிய பதவிகளை ஏற்படுத்தி வருகிறோம். ஆனால், 10 பிளஸ் 1-ஐ அடிப்படையாக வலியுறுத்துகிறபொழுது, ஆசிரியர்கள் எடுக்கின்ற லீவு வசதி பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது ஒரு பிரச்னையாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொண்டு அதைத் தனியாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு எவ்வாறு நடவடிக்கை எடுக்கலாம் என்பதை அரசு பரிசீலிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொடக்கப் பள்ளிகளிலே இப்பொழுது 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையை அமுல்படுத்துவது கிடையாது. சில பள்ளிகளில் அதிகமான மாணவர்கள் இருந்தாலும் கூட‘ அரசாங்கம் எத்தனை ஆசிரியர்களை மாவட்டத்திற்கு, ஒதுக்குகிறார்கள் என்பதைக் கணக்கிட்டுத்தான் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். போன ஆண்டைவிட இந்த ஆண்டு 50-க்கு மேல் அதிகமான குழந்தைகள் இருந்தாலும், ஒரு ஆசிரியரைக்கூட அதிகமாக நியமிப்பது கிடையாது. ஆரம்பப் பள்ளிகளில் அஸ்திவாரம் நன்றாக இருந்தால்தான், பிற்காலத்தில் குழந்தைகள் நன்கு வளர முடியும். ஆகவே, அந்த அலாட்மெண்ட்டை வைத்து நியமிப்பதை நீக்கி, 20 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையில் எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் ஆசிரியர்களை நியமிக்க அரசு வழிவகுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற விதிமுறைப்படி ஆசிரியர்கள் போடப்படவில்லை என்பதுதான் இப்போதுள்ள குறைபாடாகும். அந்த அளவுக்கு ஆசிரியர்களைப் போட நமக்குப் போதுமான நிதி

ஆதாரம் இல்லை என்பதைத்தான் காரணம் காட்டினேன். ஆனால், அதற்காகப் போடாமலும் இல்லை. ஆண்டுதோறும் கூடுதலான பதவிகளை ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம் என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆசிரியர்கள் வேலை செய்கிற ஆரம்பப் பள்ளிகளில், 5 வயதிலுள்ள குழந்தைகள் படிப்பதினால், ஆசிரியர்களுடைய வேலைப் பளு மேல் மட்டத்திலேயிருக்கிற வேலைப் பளுவை விடக் கடினம் அவர்கள் விடுப்பில் இருக்கும்போது அல்லது வேறு விதமான சில இன்னல்களில் இருக்கும்போது அந்த ஆசிரியர்கள் இல்லாத நிலையில், பல பள்ளிகளிலே பாடங்கள் நடக்காமல் நின்றுவிடுகின்றன. ஆகவே, இதற்கு நிதி என்பதை ஒரு காரணமாகக் கொள்ளாமல், அடிப்படையாகவே பார்த்து ஆசிரியர்களை நியமிப்பது என்று சொன்னால், 11-ஆவது ஆசிரியரும் அந்த இடத்திற்குத் தேவை என்ற முறையில், நிரந்தரமான விதியை அரசு உருவாக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விதி இருக்கிறது. 10 பிளஸ் 1 போட வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால், மாணவர்களின் சராசரி எண்ணிக்கை குறைகிற பொழுது, ஆசிரியர்களைக் குறைக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. அப்பொழுது இந்த விதியைப் பயன்படுத்தி, குறைக்காமல் இருக்கிறோமே தவிர, இருக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தவில்லை. அந்த அளவுக்கு விதியை நாம் செயல்படுத்தாமல் இருக்கிறோம். ஆனால், புதிய ஆசிரியர்கள் பதவிகளைக் கூடுதலாக, ஏற்படுத்தி வருவதன்மூலமாக, ஓரளவுக்கு அந்தக் குறைப்பாட்டைப் போக்கி வருகிறோம்.

கரூரில் அமர்வு நீதிமன்றம்.

வினா எண் 438—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கரூரில் அமர்வு நீதிமன்றம் (Sessions Court) ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.